விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

அழகிய ஆரம்பம் 2025 August 16-31

இன்று

ஈ இதழ்



வேண்டுதல்

மண்சோறு
சாப்பிடுவதாய்
வேண்டிக்கொண்டான்
தொண்டன்...

மணல் கடத்தல்
வழக்கில்
சிறை சென்ற
தலைவரின்
விடுதலைக்காய்!



சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்
Mobile: 8526037792

அனைவருக்கும் வணக்கம்.

இதழின் சிறிய கால தாமதத்திற்கு மன்னிக்கவும்.

எழுத்தாளர்களின் தொடர் ஆதரவுக்கு மிகுந்த நன்றி...

அடுத்த இதழிலிருந்து நண்பர்கள் யாராவது ஒருவருக்கு இலவச விளம்பரம் வெளியிடுகிறோம். அவர் உங்களுக்கு தெரிந்தவராக கூட இருக்கலாம். அவரின் புகைப்படம், செய்யும் தொழில் விபரம், என்ன விளம்பரம் செய்ய வேண்டும் என்ற விபரத்தை அனுப்பச் சொல்லவும். இது இதழின் வளர்ச்சிக்கான ஒரு படிக்கட்டாக இதைச் செய்கிறோம். வேறு பெரிய காரணங்கள் இல்லை.

அது போல் என் நண்பர் என்ற பெயரில் உங்கள் நண்பர் யாரையாவது நீங்கள் கௌரவிக்கலாம். அதற்கு அவர் உங்கள் நண்பராக இருக்க வேண்டும். அவர் புகைப்படம், எத்தனை ஆண்டுகள் நண்பராக இருக்கிறீர்கள்? அவரின் சிறப்புக்கள் என்னென்ன என்பதை குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள். சந்தோசமாக வெளியிடுகிறோம்.

சென்ற இதழில் விமர்சனத்திற்கு பரிசு உண்டு என்று அறிவித்திருந்தோம். இந்த இதழில் பரிசுக்கான விமர்சனம் வெளியாகிறது பரிசுடன்...இந்த இதழில் உள்ள விடுகதைகளை உருவாக்கித்தந்த திரு.முத்து ஆனந்த், வேலூர் அவர்களுக்கு நன்றி...

நண்பர்களே புதிய சிந்தனைக்கு கைகொடுங்கள். வாழ்வின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வோம்.

வாழ்த்துக்கள்...

வெ.கோபிநாத், ஆசிரியர்.

August 2025

Mo	Tue	We	Thu	Fri	Sat	Sun
இன்று				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

பல்ப் கவிதைகள்



முத்து ஆனந்த்,
வேலூர் செல் 7010482479

முள்ளை
முள்ளால்
எடுப்பது போல்
பல்பை
பல்பால்
உடைக்க
உன்னிடமிருந்து
தான்
கற்றுக்
கொண்டேன்
இனியவளே!



எனக்குக்
கா த ல்
பற்றுக்
கொஞ்சம் அதிகமதான்!
அதனால்தான்
நீ
கொடுக்கும் பல்ப்களை
அலட்சியமாய்
வீசி எறிந்து
உடைத்து விட்டுப்
போய்க்
கொண்டேயிருக்கிறேன்!

நீ
கொடுக்கும்
கணக்கிலலாத பல்ப்களை
வாங்கி
நான்
கடை வைக்கவும் தயார்!
ஆனால்
என்னைக்
காதலிக்க மட்டும்
நீ
மறுத்து விடாதே
அன்பே!



இந்த பல்ப் போதுமா?
இன்னும் கொஞ்சம் வேண்டுமா?
என்ற அளவிற்கு
நீ எனக்குப்
பல்புகள் வழங்குகிறாய்!
அதையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு
அழகாய்ப்
பயணம் செய்து கொண்டிருக்கிறது
என் கா த ல்!

நான்
கோபமாய்
இருக்கும் போதெல்லாம்
என்
சண்டை போடும்
எண்ணத்தைத் தவிர்த்துத்
தவிடு பொடியாக்க
நீ
மிக அழகாகவே
எனக்குப்
பல்ப் கொடுத்து விடுகிறாய்!



விடுகதைகள்

1) அனைவரையும் நடுங்க வைப்பான்
ஆதவனுக்கே அடங்குவான்! அவன் யார்?

-லி.நௌஷாத் கான்-

கவிதைகள்

என்ன சாதித்தோம்
என்ன இரசித்தோம்
என்ன வாழ்ந்தோம் என
இறுதியில் சலிப்புடன்
சிந்திக்க வைத்து விடுகிறது
இந்த கேள்விக்குறியான வாழ்க்கை?

பொய்யென தெரிந்தும்
பழகுவதை விட முடியவில்லை
இந்த பொய்
இன்னும் கொஞ்சம்
மரணம் வரை
நீடித்தால்தான் என்ன?!

துரோகத்தை பரிசாய் தரும்
அந்த அநீதி மனிதர்களிடமிருந்து
சற்று விலகியே இருங்கள்.
தனிமை சிறையாய்
பரிசை தரும் போது
ஒரு புத்தகத்தோடு
மெல்ல பழகுங்கள்,
உறவாடுங்கள்
நிச்சயம் ஒருநாள்
உறக்கத்திலிருந்த
உங்கள் வாழ்வை-ஒரு
வயலின் இசை போல மீட்டெடுக்கும்
வருங்காலத்தில்
நீங்கள் பேசுவது,உளறுவது கூட
தத்துவமாகலாம்
காலப்போக்கில்
நீங்கள் புத்தனாவதற்கும் வாய்ப்புண்டு!

-லி.நௌஷாத் கான்-




வலிகளை கூட
கேலிச் செய்யும் உலகமிது
வேடிக்கை தான் அவர்களது
வாடிக்கை
தோற்றாலும்
அடுத்தவன் தோள் தேடாதே
விழுந்தாலும்
யாரும் காண்பதற்கு முன்
எழுந்து விடு-ஏனெனில்
இந்த பூமி பொல்லாதது!
-லி.நௌஷாத் கான்-

மனிதா

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்
பேசி -9600886441.

வெற்றிச் சிகரத்தின்
விளிம்பை எட்டித்தொட
உன்னால் முடியாதா?
உனக்கு நீயே பிணைத்துக்
கொண்ட அச்சக்கயிறுகளை
அறுத்தெறிந்து
சாதனைகள் படைக்க
உன்னால் முடியாதா?
மலிவாக விமர்சனம் செய்தவர்களுக்கு
முன்னால் இமயமாக உயர்ந்து
நிற்க உன்னால் முடியாதா?
முன்னேற்றங்களை உயிராக நேசி
முயற்சியை மூச்சாக சுவாசி
கம்பீரமாக வெற்றிக் கவிதை வாசி



விடுகதைகள்

2) ஈர்க்கு போன்ற தம்பிக்குப் பந்து போலத் தலை! அது என்ன? (விடை கடைசி பக்கம்)

Types of line

Horizontal	Vertical	Diagonal
Dotted	Dashed	Wavy
Curved	Zigzag	Spiral
Loopy	Thick	Thin
Parallel	Scallop	Perpendicular

@speak Smart English

Parts of Car







விடுகதைகள்

3) மழையின் முன்னும் பின்னும் மாயாஜாலம் காட்டும்! அது என்ன? (விடை கடைசி பக்கம்)

உன்னில் நான்



உணர்வோடு
உறவாடு
இன்றோடும்
என்றோடும்
என்றென்றும்
உன்னோடு நான்!

கோவைக்கவி
புவனா



இனியவளே...

இனியவளே...
உன் புன்னகைப் பூவின்
வாசத்தில்
..என்
சுவாசம் தடைப்படுகிறது...

உன் தாமரை விழியின்
பார்வையில்
என் கண்கள் கூசுகிறது....

உன் பிறை நெற்றியின் அழகு.
.என்னை
சிறைப்படுத்துகிறது...

உன் கன்னக் குழியில்
நான் மெல்ல
புதைந்து போகிறேன்..

இனியவளே..
கொஞ்சம் கொஞ்சமாய்
கொல்லும் விச(ய)த்தை
யாருக்கும்
சொல்லி விடாதே...

இங்கே
நிறைய பேர்
நடைப்பிணங்களாக
வாழ்ந்துக்கொண்டு
இருக்கிறார்கள்...??



கவிஞர் இல.இரவி
செ.புதூர்.612203
செல்:9952113194

விமர்சனம்..... பரிசு ரூ.100
இன்று இ இதழின் ஒரு தீவிர வாசகன் என்று சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். இந்த இ இதழில் பிரசுரமாகும் கவிதைகள், அதன் அழகான வர்ணனைகளால் மனதை கொள்ளை கொள்கிறது. நகைச் சுவைகள் வாய்விட்டு சிரிக்க வைக்கிறது. மினிக்கதைகளும் உயர் தரமாக இருக்கிறது. ஒரு வேண்டுகோள். வாசகர்களின் படைப்புகளுக்கு பரிசு ஏற்படுத்தினால் இன்று இதழில் மேலும் சிறந்த படைப்புகளை எதிர்பார்க்கலாம் என்று மட்டுமல்லாமல் பரிசு கொடுப்பது படைப்பாளிகளுக்கு நிச்சயமாக ஒரு உந்துதலாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இன்று இ இதழ் மேன்மேலும் சிறக்க என் மனமார்ந்த பிரார்த்தனைகள்.

சி. ஆர். ஹரிஹரன், ஆலுவா, கேரளா.



விடுகதைகள்

4) சுமையும் தாங்கும் உதையும் கொடுக்கும்!
அது என்ன? (விடை கடைசி பக்கம்)



உன்னிடமே....

பாரதி முத்து
ஓட்டேரி



முகத்தை மூடி இருக்கும்
மேலாடைக்குள்
ஒரு விழியை காட்டிவிட்டு
மறு விழியை
மறைத்துச் சென்றாய் ...
அதில் பறிபோனது
என் இதயம்
முடிந்தால் திருப்பிக் கொடு
உன் இதயத்தை ...
இல்லையேல்
தொலைத்து விட்டு போகிறேன்
என் இதயத்தை உன்னிடமே...



இறை



சசிகலா
விஸ்வநாதன்

அது..
அவனும் அல்ல!
அவளும் அல்ல!

அரி அல்ல!
அம்புஜத்து உதித்தோனும் அல்ல!
அப்பாலுக்கும் அப்பாலாய்
நிறைந்து இருப்பது.

ஐந்து வண்ணங்களையும்,
கடந்த நிலையில் ;
துரியத்தையும் தாண்டின பேரொளி!

பெரியதும் அல்ல.
சிறியதும் அல்ல.

அறிந்த அறிவை எல்லாம்
கடந்து நிற்கும் பரஞ்சோதி.

அணுவுக்கும் அணுவாய்.
அண்டமனைத்தும் நிறைந்த
பரம்பொருள் அது.







ஹைக்கூ முற்றம் அரங்கம் விக்டோரியா அபார்ட்மென்ட் கோயம்பேடு நாள் 16-8-2025

அமைப்பாளர் மூ.முருகேஷ் மற்றும் கவிஞர் சொக்கலிங்கம்.

திருவிக பேச்சரங்கம் ஞாயிறு தோறும் மாலை 6 மணி முதல் 8 மணிவரை நடத்தப்படுகிறது இதில் எவரும் கலந்து கொண்டு தங்களுடைய திறமையை வளர்த்து கொள்ளலாம் ஹைக்கூ முற்றம் ஹைக்கூ ஆர்வலர்களை ஒருங்கிணைத்து பயிற்சி கூடம் பயிற்சியாளர் ஹைக்கூ கவிஞர் திரு மூ.முருகேஷ். விழாவில் நமது கவிஞர் கே.அசோகன் அவர்களுடன்...



விடுகதைகள்

5) வாயில்லாப் பிள்ளை ஊர் ஊராகப் பறக்கிறான்! அவன் யார்?

(விடை கடைசி பக்கம்)

கருப்பையில் நிறைத்தவளே...



சசிகலா திருமால்
கீழப்பழுவூர்

தந்தையின் ஓர் துளியில்
ஓர் உயிராய் எனை பரிணமித்தாய்
நின் மாதவிடாய் சுழற்சியினை
வாராமல் நிறுத்தி வந்தமர்ந்த எனை
வரமென ஏற்று ஐயிரு திங்கள்
சுகமாய் சுமந்தாய்...

கருவறையின் இருளகற்ற
நொடிகள் தோறும்
என்னோடு கலந்துரையாடினாய்
நானும் நின் கருவறை வாசமதில்
சுவாசமென ஏற்கும் நின் பாசமதை
உணர்ந்தேன்...

கருப்பையினை உயிர்பையென ஏற்றே
உருவமறியா எனக்கு
நின் உதிரமதை
உணவென ஊட்டினாய்...
மழலையாய் உந்தன் கைகளில்
தவழ்கையில் வாரியணைத்து
நின் வெண்ணிறக் குருதியினை
தாய்ப்பாலென ஊட்டினாய்...
அழகு குறையுமென்றோ
ஆரோக்கியம் கெடுமென்றோ நினையாமல்
கதறியழும் போதெல்லாம்
பதறித் துடித்து பசியாற்றினாய்..
தாய்மையால் எனை மெருகேற்றினாய்..

அன்பின் ஆழமதில் திளைத்து
உணர்வுகளோடு வாழும் கலைதனையும்
இனிதே கற்பித்தாய்..
யாதுமாகி நின்றாய்...
உனது தாய்ப்பாசத்திற்கு
ஈடென்று வைத்திட
ஏதுமில்லை என்னிடம்...

அந்த இறைவனிடம்
யான் வேண்டும் வரம் ஒன்றே
இனி வரும் பிறவிகள் தோறும்
எந்தன் கருப்பையில்
உனை முழுதாய் நிறைக்க வேண்டும்
அவ்வளவே...

சிறிப்பு

மனைவி : மாத்திரை மீது எதுக்குங்க காந்தத்தை வைக்கிறீங்க?

கணவன் : இரும்பு மாத்திரைன்னு சொல்லி டாக்டர் தந்தார், அதான் டெஸ்ட் பண்ணி பார்க்கிறேன்.

நாஞ்சில் சு. நாகராஜன் பறக்கை, கன்னியாகுமரி.
செல். 9486387026







6) நடக்க முடியாதவன் ஆனால் நாலு பேருக்கு வழிகாட்டி! அவன் யார்? (விடை கடைசி பக்கம்)



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

1. ஆடுவாங்க லோன் கேட்கிறீர்களே
ஏதாவது முன் அனுபவம் இருக்கா

ஆமாம் சார் வாரத்துக்கு இரண்டு
முறை மட்டன் சாப்பிடுவேன்

2. ஏன் நகை கடையில் பெண்களை
அதிகமாக வேலைக்கு
வைக்கிறார்கள்

அவர்கள்தான் நிறைய பொய்
சொல்வார்கள் அதான்

3. நம்ம கோமளா இப்போ ஏன்
கோவிலுக்கு போவதில்லை

அவளுக்கு வீடு தான் கோவிலாம்
புருஷன் தான் தெய்வமாம்
என்று சொல்கிறாள்

அப்போ தினசரி வீட்டில் அர்ச்சனை
தான் என்று சொல்லு





திரு.திருச்சிற்றம்பலம் சுரேஷ் அவர்கள் திருச்சியில் உள்ள தனலெட்சுமியின் ரோசாக்கூட்டம் என்ற அமைப்பில் சாண்டில்யன் விருது பெற்றார். திரு.சுரேஷ் அவர்களை இன்று ஈ இதழ் பாராட்டுகிறது.







திருச்சிற்றம்பலம் சுரேஷ்
செல் 9092142678

தலைவருக்கு...டாக்டர் பட்டம்
கொடுத்திருக்கக் கூடாது

ஏன்?

மருத்துவ மனை ஆரம்பிக்க இடம்
தேடுகிறார்

.....

தலைவருக்கு டாக்டர் பட்டம் தந்தது
ரொம்ப தப்பு?

ஏன்?

அவர் பெயருக்கு பின் எத்தனை ஆங்கில
எழுத்தை சேர்க்கனும் கேட்கிறார்.

பிறந்த நாள்

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

வருடந்தோரும் வரும் போகும்
வயது ஒன்றைக் கூட்டிப் போகும்

புதிதாய் பிறந்தது போல்
புத்தாடை அணிந்து மகிழ்வோம்

புன்னகை தவழ ஆசிகளும்
வாழ்த்தும் பெற விழைவோம்

கோவிலுக்குச் சென்று சாமி
கும்பிட்டு இனிப்புகள் வழங்கி

இன்றைய நாளை இனிய நாளாக்கி
பெருமிதம் கொள்வோம்

பெரிய பார்ட்டிகளும் பாட்டும் கூத்தும்
போதை தரும்

விழா எடுத்துப்பலருக்கும்
தெரிய பகட்டு காண்பித்து

கொண்டாடும் நீங்கள் ஒரை
ஒருமுறை திரும்பிப் பார்த்து

உங்கள் பிறந்தநாள் ஒரு சிறந்த நாளாய்
அமைந்துள்ளதா

என்பதைச் சிந்தியுங்கள் மாற்றம் புரியும்
மனம் மாறும்
நம் பிறந்தநாளை நாடு கொண்டாட
வேண்டும் இனி

நமக்கே நமக்கென வாழாமல் சிறிது
பிறர்க்கென வாழ்வோம்

தினம் தினம் புதிதாய்ப் பிறப்போம்
புதுமை காண்போம்

சிரிப்பு

ஒருவர் : நீங்க இட்லி வியாபாரம் செய்து டாக்டருக்கு படிக்க வைத்த உங்க பேரன் இப்போ என்ன பண்றான்?

பாட்டி : ஏதோ அவனால முடிந்த கிட்னி வியாபாரம் பண்றான் தம்பி.

நாஞ்சில் சு. நாகராஜன் பறக்கை, கன்னியாகுமரி.
செல். 9486387026

7094053241
indhrumail@gmail.com

Emergency Helpline No.

100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
108	Medical Helpline
131	Indian Railway Enquiry
139	Railway Enquiry
1031	Anti Corruption Helpline
1072	Train Accident
1090	Anti Terror Helpline
1910	Blood Bank Information
1947	Aadhar card-UIDAI
1071	Air Accident
1906	LPG Emergency Helpline
1919	Eye Donation Bank
1551	Kisan Call Center
1096	Natural Disaster Control
1098	Child Abuse Hotline



எப்படி படிப்பது என்ற குழப்பமா?

நீங்கள் TNPSC தேர்வுக்கு படிக்கிறீர்களா?

சிறந்த திட்டமிடல் கொண்ட புத்தகம்...

புத்தகம் 100.00
கூரியர் 50.00
மொத்தம் 150.00
G.Pay 7094053241

காதல் நெருப்பு

காதல் நெருப்பு
நிச்சயம் அவள்
கண்களில் இருக்கு

கனவுத் தூண்டில்

கனவுத் தூண்டில் போட்டு
ஏனடி என் இரவுக்கடலில்
மீன் பிடிக்கிறாய்?

கொள்ளைக் கொண்டாய்

என்னைக் கொள்ளைக்
கொண்டாய்
இல்லை இல்லை என்
கொள்கையைக் கொன்றாயடி.


உதிர்ந்த பூக்கள்

பிரபஞ்ச பேரேட்டில் இருந்து
கவிதைகள்
உதிர்ந்து கிடக்குது

என்னவளே

உன்னைப் பார்க்கும்போது
வாசிப்பையும் நேசிப்பையும்
ஒருசேர செய்யுதுதடி இதயம்

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம் அஞ்சல்
கைப்பேசி -9600886441.



அறிஞர்களின் பொன்மொழிகள்



முத்து ஆனந்த்,
வேலூர் செல் 7010482479

வலிமை, வீரம் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை - மகாத்மா காந்திஜி

அறிவில்லாத கோபம் அசட்டுத்தனம் - ஜெர்மன் பழமொழி

இதயத்தின் சிறைச்சாலை அச்சம் - இஸ்ரேல் பழமொழி

வாய்மையின் மிக நெருங்கிய நண்பன் அச்சமின்மை - ஜவகர்லால் நேரு

அடக்கம் ஓர் அணிகலன் மட்டுமல்ல ஒழுக்கத்தின் சிறந்த பாதுகாப்பும் கூட! - ஜோசப் அடிசன்

சுயமாக சிந்திக்காத மனிதன் அடிமை! - இங்கர்சால்

சிறிய மனிதர்களால் இயக்கப்படும் அசுர இயந்திரம் அதிகார வர்க்கம் ஒனோரே தே பல்ஜாக்

அறிவைக் காட்டிலும் மனித வாழ்வை ஆள்வது அதிர்ஷ்டம் தான்- டேவிட் ஹ்யூம்

மனிதன் அடையும் பெரும் பேறு அமைதி! - பெர்ட்ரண்ட் ரசல்

எண்ணங்களைச் சம்பவமாக்குவது அரசியல்! - ஸ்மைல்ஸ் சாமுவேல்

உலகில் அடக்க முடியாத அசுரன் அலட்சியம்! - ஓயிடா

பிசாசின் குணம் அவசரம்! - எகிப்து பழமொழி

இயற்கையின் சொத்து அழகு - மில்டன்



விடுகதை விடைகள்

1) குளிர்
2) தீக்குச்சி
3) வானவில்
4) கழுதை
5) ஆகாய விமானம்
6) கைகாட்டி பலகை





கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர் ஆசிரியர்
திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் - 29 சக்தி நகர்,
ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241

இன்று இதழை படித்ததற்கு நன்றி